المكتب التعاوني للدعوة والإرشاد
وتوعية الجاليات في الخبر

أسلمت حديثا فكيف أصلي؟

புதிதாக இஸ்லாத்தை ஏற்ற நான் எவ்வாறு தொழுவது?

தொகுப்பு: அஸ்ஹர் யூஸுப் ஸீலானி

إعداد: محمد أزهر محمد يوسف
(الداعية بالمكتب)

hedayh_ar 0564375734 | www.hedayh.org
SA5480000139608010140154 مصرف الراجحي Al Rajhi Bank

بسم الله الرحمن الرحيم

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்.

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் இரண்டாவதாகத் திகழும் தொழுகை என்பது ஓர் உயரிய வணக்கமாகும். படைத்தவன்பால் ஒருவர் தன்னை நெருக்கமாக்கிக் கொள்வதற்குள்ள ஒரு சிறந்த ஊடகமாகும்.

நான் அழகிய முறையில், நிறைவாக அங்க சுத்தி வுழூச் செய்து தொழுகைக்காக தூய உள்ளத்துடன் கிப்லாவை முன்னோக்கி, இரு கரங்களையும் காதின் கீழ் பகுதி வரையோ அல்லது தோல் புஜங்களுக்கு நேராகவோ உயர்த்தி அல்லாஹு அக்பர் எனக் கூறியவனாக இடது கையின் மீது வலது கையை வைத்து நெஞ்சின் மீது வைத்துக் கொள்வேன்.

கீழுள்ள படங்களை கவனிக்கவும்:

நிலையில் இருக்கும்போது நான் கீழுள்ளவற்றை ஓதிக் கொள்வேன்:

اللَّهُمَّ بَاعِدْ بَيْنِي وَبَيْنَ خَطَايَايَ كَمَا بَاعَدْتَ بَيْنَ الْمَشْرِقِ وَالْمَغْرِبِ اللَّهُمَّ نَقِّنِي مِنَ الْخَطَايَا كَمَا يُنَقَّى الثَّوْبُ الأَبْيَضُ مِنَ الدَّنَسِ اللَّهُمَّ اغْسِلْ خَطَايَايَ بِالْمَاءِ وَالثَّلْجِ وَالْبَرَدِ.

'அல்லாஹு்ம்ம பாயித் பைனீ வபைன கதாயாய கமா பாஅத்த பைனல் மஷ்ரிகி வல் மஃரிப். அல்லாஹு்ம்ம நக்கினீ மினல் கதாயா கமா யுனக்கஸ் ஸவ்புல் அப்யலு மினத் தனஸ். அல்லாஹு்ம் மஃஸில் கதாயாய பில்மாயி வஸ்ஸல்ஜி வல்பரத்.'

இதைத் தொடர்ந்து நான் அல்பாஃதிஹா அத்தியாயத்தை ஓதுவேன்:

أَعُوذُ بِاللَّهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ (١) الْحَمْدُ لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ (٢) الرَّحْمَنِ الرَّحِيمِ (٣) مَالِكِ يَوْمِ الدِّينِ (٤) إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ (٥) اهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ (٦) صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ (٧)

'அஊது பில்லாஹி மினஷ் ஷைதானிர் ரஜீம்.
பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.
அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.
அர்ரஹ்மானிர் ரஹீம்.
மாலிகி யவ்மித்தீன்.
இய்யாக நஃபுது வஇய்யாக நஸ்தஈன்.
இஹ்தினஸ் ஸிராதல் முஸ்தகீம்.
ஸிராதல்லதீன அன்அம்த அலைஹிம் கஃய்ரில் மஃலூபி அலைஹிம் வலழ்ழால்லீன்.'
ஆமீன்.

அல்குர்ஆனில் வேறு ஏதாவது சிறு அத்தியாயங்கள் தெரிந்திருந்தால் அவற்றில் ஒன்றை நான் ஓதிக் கொள்வேன்.

அல்குர்ஆனின் மூன்று சிறு அத்தியாயங்கள், நான் எளிதாக மனனமிட்டுக் கொள்வதற்காக:

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ
قُلْ هُوَ اللَّهُ أَحَدٌ ﴿١﴾ اللَّهُ الصَّمَدُ ﴿٢﴾ لَمْ يَلِدْ وَلَمْ يُولَدْ ﴿٣﴾
وَلَمْ يَكُن لَّهُ كُفُوًا أَحَدٌ ﴿٤﴾

'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம். குல் ஹுவல்லாஹு அஹத். அல்லாஹுஸ் ஸமத். லம் யலித் வலம் யூலத். வலம் யகுல் லஹு குபுஃவன் அஹத்.'

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ
قُلْ أَعُوذُ بِرَبِّ الْفَلَقِ ﴿١﴾ مِن شَرِّ مَا خَلَقَ ﴿٢﴾ وَمِن شَرِّ
غَاسِقٍ إِذَا وَقَبَ ﴿٣﴾ وَمِن شَرِّ النَّفَّاثَاتِ فِي الْعُقَدِ ﴿٤﴾ وَمِن
شَرِّ حَاسِدٍ إِذَا حَسَدَ ﴿٥﴾

'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம். குல் அஊது பிரப்பில் பஃலக். மின் ஷர்ரி மா கலக். வமின் ஷர்ரி காஃஸிகின் இதா வகப். வமின் ஷர்ரின் நப்ஃபஃஸாதி பிஃல் உகத். வமின் ஷர்ரி ஹாஸிதின் இதா ஹஸத்'.

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ
قُلْ أَعُوذُ بِرَبِّ النَّاسِ ﴿١﴾ مَلِكِ النَّاسِ ﴿٢﴾ إِلَٰهِ النَّاسِ ﴿٣﴾ مِن
شَرِّ الْوَسْوَاسِ الْخَنَّاسِ ﴿٤﴾ الَّذِي يُوَسْوِسُ فِي صُدُورِ النَّاسِ
﴿٥﴾ مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ ﴿٦﴾

'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்
ரஹீம். குல் அஊது பிரப்பிந்
நாஸ். மலிகிந் நாஸ்.
இலாஹிந் நாஸ். மின் ஷர்ரில்
வஸ்வாஸில் கன்னாஸ்.
அல்லதீ யுவஸ்விஸு பீஃ
ஸுதூரிந் நாஸ். மினல்
ஜின்னதி வந்நாஸ்.'

அவற்றை நான் ஓதி முடித்தவுடன்; ருகூ செய்வேன்.

நான் ருகூவுக்குச் செல்லும்போது இரு கரங்களையும், காதின் கீழ் பகுதி வரையோ அல்லது தோல் புஜங்களுக்கு நேராகவோ உயர்த்தியவனாக அல்லாஹு அக்பர் எனக் கூறி ருகூ செய்;வேன். ருகூ என்பது குனிந்து இரு கைகளையும் எனது மூட்டின் மீது வைப்பதாகும். அப்போது இரு கைகளும் விலாப்புறத்தில் படாதவாறு நேராக வைத்துக் கௌ;வேன். மேலும் தலையையும், முதுகையும் சமமாக வைத்துக் கொள்வேன். தலையைத் தாழ்த்தியோ உயர்த்தியோ இருக்கமாட்டேன்.

கூட்டாகத் தொழும் சந்தர்ப்பங்களில் நான் ருகூவிலிருந்து எழும்போது ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹ் எனக் கூறாமல் மாறாக எழுந்தவுடன் 'ரப்பனா லகல் ஹம்து' எனக் கூறுவேன்.

அதன் பின் நான் அல்லாஹு அக்பர் எனக்கூறியவனாக ஸஜ்தாவுக்குச் செல்வேன். ஸஜ்தாவின்போது தரையில் பட வேண்டிய உறுப்புகள்: எனது நெற்றி, மூக்கு, இரு உள்ளங்கைகள், இரு மூட்டுக்கள், இரு பாதங்களின் நுனி விரல்கள். எனது இரு கால்களையும் சேர்த்து, கால் விரல்களை வளைத்து கிப்லாத் திசையை முன்னோக்கும் விதமாக வைத்துக் கொள்வேன்.

ஸஜ்தாவின் போது ஆடையோ முடியோ தரையில் படாதவாறு நான் தடுத்துக் கொள்ள மாட்டேன். ஸஜ்தாவில் எனது இரு கைகளையும், காதுகளுக்கு நேராகவோ அல்லது தோள் புஜங்களுக்கு நேராகவோ வைத்துக் கொள்வேன். எனது இரு கைகளைத் தொடையில் படாமலும், முழங்கை தரையில் படாமலும் உயர்த்தி வைத்துக் கொள்வேன். எனது தொடையும், வயிறும் சேராதவாறு வைத்துக் கொள்வேன்.

கூட்டாகத் தொழும் சந்தர்ப்பங்களில் நான் ருகூவிலிருந்து எழும்போது ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹ் எனக் கூறாமல் மாறாக எழுந்தவுடன் 'ரப்பனா லகல் ஹம்து' எனக் கூறுவேன்.

அதன் பின் நான் அல்லாஹு அக்பர் எனக்கூறியவனாக ஸஜ்தாவுக்குச் செல்வேன். ஸஜ்தாவின்போது தரையில் பட வேண்டிய உறுப்புகள்: எனது நெற்றி, மூக்கு, இரு உள்ளங்கைகள், இரு மூட்டுக்கள், இரு பாதங்களின் நுனி விரல்கள். எனது இரு கால்களையும் சேர்த்து, கால் விரல்களை வளைத்து கிப்லாத் திசையை முன்னோக்கும் விதமாக வைத்துக் கொள்வேன்.

ஸஜ்தாவின் போது ஆடையோ முடியோ தரையில் படாதவாறு நான் தடுத்துக் கொள்ள மாட்டேன். ஸஜ்தாவில் எனது இரு கைகளையும், காதுகளுக்கு நேராகவோ அல்லது தோள் புஜங்களுக்கு நேராகவோ வைத்துக் கொள்வேன். எனது இரு கைகளைத் தொடையில் படாமலும், முழங்கை தரையில் படாமலும் உயர்த்தி வைத்துக் கொள்வேன். எனது தொடையும், வயிறும் சேராதவாறு வைத்துக் கொள்வேன்.

ஸஜ்தாவில் 'சுப்ஹான ரப்பியல் அஃலா' என நான் மூன்று முறை ஓதிக் கொள்வேன்:
ஸஜ்தாவின் முறையை படத்தில் கவனிக்கவும்:

ஸஜ்தாவிலிருந்து அல்லாஹு அக்பர் எனக் கூறியவனாக எழுந்து உட்காருவேன். எனது வலது காலை நட்டியவனாக இடது காலின் மீது அமருவேன். ரப்பிஃபிஃர்லி, ரப்பிஃபிஃர்லி, என இரண்டு முறை ஓதிக் கொள்வேன்.

இருப்பின் முறையை படத்தில் கவனிக்கவும்:

அதன் பின் நான் அல்லாஹுஅக்பர் எனக் கூறியவனாக இரண்டவாது ஸஜ்தா செய்வேன். முதல் ஸஜ்தாவை நான் செய்தது போன்றே இரண்டாவது ஸஜ்தாவையும் செய்வேன்.

இரண்டாவது ஸஜ்தாவிலிருந்து அல்லாஹுஅக்பர் எனக் கூறியவனாக இரண்டாவது ரக்அத்திற்காக எழுந்திருப்பேன். முதல் ரக்அத்தில் கைகளை வைத்துக் கொண்டதைப் போன்றே இடது கையின் மீது வலது கையை வைத்து நெஞ்சின் மீது வைத்துக் கொள்வேன். முதல் ரக்அத்தில் ஓதியது போன்று அல்பாஃதிஹா அத்தியாயத்தையும், அல்குர்ஆனின் மற்றுமொரு அத்தியாயத்தையும் ஓதிக் கொள்வேன். அதன் பின் முதல் ரக்அத்தைப் போன்றே இரண்டாவது ரக்அத்தை நிறைவு செய்து, இரண்டவாது ஸஜ்தாவிற்குப் பின் அமர்ந்து தஷஹ்ஹுதை ஓதுவேன்.

தஷஹ்ஹுதின்போது ஆட்காட்டி விரலைத் தவிர மற்ற எல்லா விரல்களையும் மடக்கி, ஆட்காட்டி விரலை மாத்திரம் நீட்டி அசைத்துக் கொண்டிருப்பேன். அப்போது எனது பார்வை ஆட்காட்டி விரலை நோக்கியே இருக்கும்.

தஷஹ்ஹுத் பிரார்த்தனை:

'அத்தஹிய்யாது லில்லாஹி வஸ்ஸலவாது வத்தய்யிபாது அஸ்ஸலாமு அலைக அய்யுஹன்னபிய்யு வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு.

'முதல் தஷஹ்ஹுத் அமர்வின் முறையை படத்தில் கவனிக்கவும்:

இதை நான் ஓதி முடித்ததன் பின் மூன்று, அல்லது நான்கு ரக்அத்துகள் கொண்ட தொழுகையாக இருந்தால் மூன்றாவது ரக்அத்திற்காக இரு கரங்களையும், காதின் கீழ் பகுதி வரையே அல்லது தோல் புஜங்களுக்கு நேராகவோ உயர்த்தியவனாக அல்லாஹு அக்பர் எனக் கூறி எழுந்திருப்பேன். முந்தைய ரக்அத்தில் செய்ததைப் போன்றே செய்வேன்.

ஆனால் முதல் இரண்டு ரக்அத்தில் அல்பாஃதிஹா அத்தியாயத்தைத்

தொடர்ந்து மற்றுமொரு அத்தியாயத்தை ஓதியது போன்று மூன்றாவது, நான்காவது ரக்அத்தில் ஓதாமல் அல்பாஃதிஹா அத்தியாயத்துடன் மாத்திரம் நான் போதுமாக்கிக் கொள்வேன். ஏனையவைகளை முந்தைய ரக்அத்தைப் போன்றே செய்வேன்.

தொழுகையில் இறுதி ரக்அத்தாக இரண்டாவது, மூன்றாவது, நான்காவது ரக்அத்துகள் அமையும்.

இறுதி ரக்அத்தில்; ஆரம்பத்தில் சுட்டிக்காட்டிய தஷஹ்ஹுதுடன் சேர்த்து ஸலவாத்தையும் நான் ஓதிக் கொள்வேன். இறுதி இருப்பின் போது இடது காலை வெளிப்படுத்தி வலது காலை நாட்டி வைத்து எனது இருப்பிடம் தரையில் படுமாறு அமர்ந்து கொள்வேன்.

இறுதி இருபிபில் அமரும் முறையை படத்தில் கவனிக்கவும்:

இறுதி இருப்பில் முதலில் சுட்;டிக் காட்டிய தஷஹ்ஹுதுடன் சேர்த்து

கீழுள்ள ஸலவாத்தையும் நான் ஓதிக் கொள்வேன்: 'அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத அலா இப்ராஹீம் வஅலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீத். அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்ஹமதின் கமா பாரக்த அலா இப்ராஹீம் வஅலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீத்'.

நான் இதை ஓதி முடித்ததன் பின் வலப்பக்கம் எனது முகத்தை திருப்பி அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ் எனக் கூறுவேன். இடப் பக்கமும் எனது முகத்தைத் திருப்பி இவ்வாறே கூறுவேன்.

ஸலாம் சொல்வதற்கு முகத்தைத் திருப்பும் முறையை படத்தில் கவனிக்கவும்.



கடமையாக்கப்பட்ட ஐவேளைத் தொழுகையின் அட்டவணை:

	தொழுகை	அதன் நேரம்	எண்ணிக்கை
1	ப∴ஜ்ர்	வைகறை முதல், சூரியன் உதிக்கும் வரை	2 ரக்அத்துகள்
2	ழுஹர்	சூரியன் உச்சி சாய்ந்ததிலிருந்து அஸர் வரை.	4 ரக்அத்துகள்
3	அஸர்	ஒரு பொருளின் நிழல் அதன் அளவு வந்ததிலிருந்து சூரியன் மறையும் வரை.	4 ரக்அத்துகள்
4	ம∴ரிப	சூரியன் மறைந்ததிலிருந் து, செம்மை மறையும் வரை	3 ரக்அத்துகள்
5	இஷா	செம்மை மறைந்ததிலிரந் து, பாதி இரவு வரை	4 ரக்அத்துகள்

குறிப்பு: ஆதாரப்பூர்வமான நபி மொழிகளை அடிப்படையாகக் கொண்டே இது தொகுக்கப்பட்டுள்ளது. இது புதிதாக இஸ்லாத்தை ஏற்றவர்கள், ஆரம்ப நிலையில் உள்ளவர்களை கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும். அல்லாஹ்வின்

தூதர் தொழுகையில் பல பிரார்த்தனைகளை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஓதியுள்ளார்கள். இங்கு குறிப்பிடப்பட்டவைகளை மாத்திரம்தான் ஓதினார்கள் என்று நீங்கள் விளங்கி விடக்கூடாது. புதிதாக இஸ்லாத்தை ஏற்ற சகோதரர்கள் அல்பாஃதிஹா அத்தியாயத்தை மனனமிடுவதில் அவசரம் காட்ட வேண்டும், ஆரம்ப நாட்களில் தொழுகையில் ஓதுவற்கு ஏதும் தெரிய வில்லையென்றால், ஸுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், லா இலாஹ இல்லல்லாஹ் போன்ற தூய வார்த்தைகளை திரும்ப திரும்பக் கூறியாவது தொழ வேண்டுமே தவிர, தெரியாது என்று காரணம் காட்டி தொழாமல் இருந்து விடக் கூடாது. இஸ்லாத்தை ஒருவர் ஏற்றவுடன் ஒரு முஸ்லிமுக்குக் கடமையாகின்ற அனைத்தும் அவர் மீது கடமையாகி விடும்.